26.05.2016

தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

## மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறப்பு அதிகரிப்பு

மேட்டூர் அணையிலிருந்து குடிநீர்த் தேவைக்கு திறக்கப்படும் நீரின் அளவு நொடிக்கு 1000 கனஅடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

மேட்டூர் அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்துக்கு திறக்கப்படும் தண்ணீர் கடந்த பிப்ரவரி 25ஆம் தேதி நிறுத்தப்பட்டது. அதன்பிறகு மார்ச் 1ஆம் தேதி முதல் குடிநீர்த் தேவைக்காக தண்ணீர் திறக்கப்பட்டு வந்தது. 500 கனஅடி முதல் 2000 கனஅடி வரை தேவைக்கு ஏற்ப தண்ணீர் திறப்பு அதிகரித்தும், குறைத்தும் திறக்கப்பட்டு வந்தது. கடந்த ஒரு வாரத்துக்கு மேலாக குடிநீருக்கு நொடிக்கு 500 கனஅடிவீதம் திறக்கப்பட்டு வந்தது. செவ்வாய்க்கிழமை மாலை 6 மணி முதல் குடிநீருக்கு திறக்கப்படும் நீரின் அளவு நொடிக்கு 1000 கனஅடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. புதன்கிழமை காலை மேட்டூர் அணையின் நீர்மட்டம் 46.92 அடியாக இருந்தது. அணைக்கு நொடிக்கு 105 கனஅடிவீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து நொடிக்கு 1000 கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டு வந்தது. அணையின் நீர் இருப்பு 15.92 டி.எம்.சியாக இருந்தது.

## விவசாயிகள் நவீன வேளாண் முறையைப் பின்பற்ற வேண்டும்

விவசாயிகள் நவீன வேளாண் முறையைப் பின்பற்ற வேண்டும் என்று வேளாண்துறை அமைச்சர் கிருஷ்ண பைரே கெப்டா தெரிவித்தார்.

பெங்களூரு, சேஷாத்திரி சாலையில் அமைந்துள்ள வேளாண் ஆணையர் அலுவலகத்தில் புதன்கிழமை வேளாண் துறையின் அனைத்து மாவட்ட இணை இயக்குநர்களுடன் காணொலிக் காட்சிமூலம் நடந்த கலந்தாய்வுக்

கூட்டத்தில் பங்கேற்று அவர் பேசியது: கர்நாடகம் மட்டுமல்லாது, இந்தியாவின் விவசாயிகள் அனைவரும் சோதனையான காலக்கட்டத்தில் வாழ்ந்து வருகிறார்கள். விவசாயத்திற்கு தரமான விதை, உரம் கிடைப்பதில் இருந்து, பயிரிட்டு, அறுவடை செய்வது வரை விவசாயிகள் பல்வேறு சோதனைகளை எதிர்கொள்ள நேரிடுகிறது. அறுவடைக்குப் பிறகு விளைச்சலுக்கு செலவழித்த பணத்தை எடுக்க இயலாத பரிதாப நிலை நீடித்துவருகிறது. விவசாயிகள் எதிர்கொள்ளும் அனைத்து வகையான சவால்கள், இன்னல்களுக்கு தொழில்நுட்பத்தின் மூலமே தீர்வுகாண முடியும் என்பதை அதிகாரிகள் உணர்ந்து, அதை விவசாயிகளிடம் எடுத்துக்கூற வேண்டும். வேளாண் பல்கலைக்கழகங்கள் மற்றும் வேளாண் துறைக்கும் இடையே இடைவெளி அதிகரித்து வருகிறது.

அதேபோல, வேளாண் துறைக்கும் விவசாயிகளுக்கும் இடையேயும் இடைவெளி அதிகரித்து வருகிறது. இந்த இடைவெளியைக் குறைக்கும் வகையில் வேளாண் துறையினர் விவசாயிகளை நாடிச் செல்ல வேண்டும். வேளாண் துறையில் புதிய புதிய கண்டுபிடிப்புகள் வந்திருந்தாலும், அவை விவசாயிகளைச் சென்றடையவில்லை என்பது வேதனையான உண்மை. அறிவியலுக்கு எதிரான வேளாண் முறையை விவசாயிகள் கைவிட வேண்டும். மேலும் விவசாயிகள் நவீன அறிவியல் கருவிகள், கண்டுபிடிப்புகளைப் பயன்படுத்தத் தொடங்க வேண்டும். வேளாண்மையில் நிகழ்ந்துவரும் நவீன அறிவியல் மாற்றங்களை விவசாயிகளிடம் கொண்டுசெல்ல வேளாண்மை முகாம்களை நடத்த அரசு திட்டமிட்டுள்ளது. இந்த திட்டத்தைச் செம்மையாக செயல்படுத்த அதிகாரிகள் ஆர்வம் காட்ட வேண்டும். இந்த முகாமில் மாநில அரசின் வேளாண் திட்டங்கள் தவிர, வேளாண் கருவிகள், புதிய கண்டுபிடிப்புகள், மண்வளப் பாதுகாப்பு குறித்த தகவல்களும் அளிக்கப்படும். இந்த முகாமில் வேளாண் துறை தவிர தோட்டக்கலை, கால்நடை பராமரிப்பு, பட்டு வளர்ப்பு, மீன் வளம், கூட்டுறவுத் துறைகளும் கலந்து கொள்கின்றன. அதேபோல, கிருஷிபாக்கியா எனப்படும் வேளாண் மேம்பாட்டு திட்டத்தையும் திறம்படச் செயல்படுத்த வேண்டும். இதுதவிர, விதைத் திருவிழாவையும் நடத்தி விவசாயிகளே விதைகளை

உற்பத்தி செய்ய ஊக்குவிக்க வேண்டும் என்றார் அவர். இக் கூட்டத்தில் வேளாண் துறை ஆணையர் பாண்டுரங்க பி.நாயக் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### மரங்களின் நகரம்

வெயில் காலத்தில் தான் மரங்களின் அருமையை உணர்கிறோம். மரநிழலை தேடுகிறோம். ஆனால் நகர் முழுவதும் மரங்கள் அடர்ந்து பசுமையாக உள்ள நகராக குஜராத்தின் தலைநகர் காந்திநகர் உள்ளது. இந்தியாவில் திட்டமிட்டுஉருவாக்கப்பட்ட நகரம் என்பதால் நகரை உருவாக்கும் போதே மரங்களுக்கு அதிக முக்கியத்துவம் தரப்பட்டது. காந்தி நகரை இந்தியாவின் 'பசுமை நகர்' என்கிறோம். இந்த மரங்கள் தான் காந்தி நகரின் காற்று மாசுபாட்டையும் ஒலிமாசுபாட்டையும் பெருமளவில் குறைக்கின்றன. இந்தியாவின் மற்றொரு பசுமை நகராக சண்டிகர் நகரம் உள்ளது. சண்டிகரும் காந்தி நகரைப் போன்றே திட்டமிட்டு உருவாக்கப்பட்ட நகர்

### விவசாயிகள் சங்க மாநில மாநாடு

தாராபுரம்: தாராபுரத்தில் விவசாயிகள் சங்கத்தின் மாநில மாநாட்டை நடத்துவது என நேற்று நடந்த மாநில நிர்வாககுழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கட்சி சார்பற்ற தமிழக விவசாயிகள் சங்கத்தின் மாநில நிர்வாகக்குழு கூட்டம் நேற்று காலை தாராபுரத்தில் நடந்தது. மாவட்ட தலைவர் காளிமுத்து தலைமை வகித்தார். சந்திரசேகரன், சுப்பிரமணியன், அவினாசி முத்துச்சாமிகவுண்டர் உட்பட பலர் சங்கத்தின் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து உரையாற்றினர். கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

சங்கத்தின் நிறுவனராக இருந்து விவசாயிகளின் உரிமைகளுக்கு குரல் கொடுத்த, மறைந்த தலைவர் பழனிச்சாமிக்கு இரங்கல் தெரிவிப்பது. கடந்த, 1976ம் ஆண்டு நடந்த போராட்டத்தில் மரணம் அடைந்த, 40 விவசாயிகளின் குடும்பங்களுக்கு, ஐந்து லட்சம் நிவாரணம் வழங்கியதற்கு நன்றி. அவினாசி - அத்திக்கடவு திட்டத்தை நிறைவேற்ற நிதி ஒதுக்கி ஆணை பிறப்பித்ததற்கு நன்றி. விவசாயிகளின் பயிர் கடன்களை ரத்து செய்து உத்தரவு பிறப்பித்த தமிழக முதல்வருக்கு நன்றி. வரும் ஜுலை மாதம், 5ம் தேதி கட்சி சார்பற்ற விவசாயிகள் சங்கத்தின் மாநில மாநாடு மற்றும் பேரணியை தாராபுரத்தில் சிறப்பாக நடத்துவது உட்பட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. கூட்டத்தில் தமிழக சட்ட விழிப்புணர்வு இயக்க தலைவர் செல்வராஜ், கோவை மாவட்ட நிர்வாகி பாபு, திருப்பூர் மாவட்ட செயலாளர் ஈஸ்வரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**விவசாயிகள் சங்க ஆலோசனை கூட்டம்**

முத்தூர்: முத்தூரை அடுத்த, அய்யம்பாளையம் நால்ரோட்டில், தமிழக கட்சி சார்பற்ற விவசாயிகளின் சங்க ஆலோசனை கூட்டம் நடந்தது.

மாவட்ட துணை தலைவர் நடராஜ் கூட்டத்திற்கு தலைமை வகித்தார். கூட்டத்தில் தமிழக சிறு, குறு விவசாயிகளின் கூட்டுறவு வங்கி பயிர்க்கடன், நடுத்தர கால கடன்கள், நீண்ட கால கடன்களை தள்ளுபடி செய்த தமிழக முதல்வர் ஜெயலலிதாவிற்கு நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மேலும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் விவசாய கடன்களையும் தள்ளுபடி செய்ய தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## 'காலிங்கராயன் கால்வாய் கரை பலப்படுத்தும் பணி நிதி ஒதுக்கியதும் துவங்கும்' அதிகாரிகள் தகவல்

ஈரோடு: ஈரோடு, காலிங்கராயன் வாய்க்கால் கரைகளை பலப்படுத்த பொதுப்பணித்துறை முடிவு செய்துள்ளது.

ஈரோடு காலிங்கராயன் வாய்க்கால் மூலமாக, 18 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலம் பாசன வசதி பெறுகிறது.

தற்போது வாய்க்காலில் தண்ணீர் திறப்பது நிறுத்தப்பட்டுள்ளதால், பலமிழந்து சரிந்து விழுந்துள்ள கரைபகுதியை பலப்படுத்த வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுகுறித்து கீழ் பவானி வடிநிலக் கோட்டப் பொறியாளர் ராசு கூறியதாவது:

பவானி அணைக்கட்டின் உள் பகுதி சேதமடைந்துள்ளது. இதன் காரணமாக தினமும், 100 கன அடி அளவுக்கு தண்ணீர் கசிந்து வீணாகிறது. இதை தடுப்பதற்காக, 7.8 கோடி செலவில், அணையின் உட்புற சுவரை பலப்படுத்தும் பணியும், மேல்பகுதியில் கான்கிரீட் போடும் பணியும் கடந்த இரண்டு மாதமாக நடக்கிறது.

அணையில் இருந்து வைராபாளையம் வரை கான்கிரீட் தளம் அமைத்து கரைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

வைராபாளையதத்தை அடுத்த கருங்கல்பாளையத்தில் இருந்து, மோசமாக உள்ள கரை பகுதியை பலப்படுத்தவும், மராமத்து பணிகள் செய்யவும் உத்தேசிக்கப்பட்டது.

இதற்காக மாநில அரசிடமிருந்து, 80 கோடி ரூபாய் நிதி கோரி இருக்கிறோம். ஒதுக்கீடு செய்யப்பட்டதும், பணிகள் தொடங்கும். இவ்வாறு அவர் கூறினார்.

## சத்தியில் சூறாவளி காற்றுடன் மழை: மரங்கள் வேரோடு சாய்ந்தன

சத்தியமங்கலம்: சத்தியமங்கலம் பகுதியில் நேற்று மாலை திடீரென சூறாவளி காற்றுடன் மழை கொட்டியதால், பல இடங்களில் மரங்கள் வேரோடு சாய்ந்தன.

சத்தியமங்கலம் பகுதியில் கடந்த மூன்று நாட்களாக, வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்தது. இதனால் பொதுமக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டனர். இந்நிலையில் நேற்று மாலை, 5 மணிக்கு திடீரென மழை கொட்டத் துவங்கியது. பலத்த சூறாவளி காற்றும் வீசியது. இதனால் பல்வேறு பகுதிகளில் மரங்கள் சாய்ந்தன. சத்தியமங்கலத்தில் இருந்து கோபி செல்லும் சாலையில், அரியப்பம்பாளையம் அருகே இரண்டு புளியமரங்களும், ஒரு வேப்ப மரமும் சாலையின் குறுக்கே விழுந்தன. இதனால், இருசக்கர வாகனங்கள் கூட செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. மின்சார கம்பி மீது மரம் விழுந்ததால், அரியப்பம்பாளையம் பகுதியில் மின்தடை ஏற்பட்டது. சத்தியமங்கலம் போக்குவரத்து, எஸ்.ஐ., முருகன் சம்பவ இடத்திற்கு வந்து, வாகனங்களை மாற்றுப் பாதையில் திருப்பிவிட நடவடிக்கை மேற்கொண்டார்.

* சத்தியமங்கலம் மற்றும் பவானிசாகர் பகுதியில் நேற்று மாலை மழையுடன், வீசிய சூறாவளி காற்றால், பல்வேறு பகுதிகளில் அறுவடைக்கு தயாராய் இருந்த, ஆயிரக்கணக்கான வாழை மரங்கள் அடியோடு சாய்ந்தன. இதனால் விவசாயிகளுக்கு பல லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

## நாவல் பழ சீசன்

கூடலூர் : கூடலூரில் நாவல் பழ சீசன் துவங்கியுள்ளது.

கூடலூர் வனப்பகுதியில் இயற்கையாக விளையும் மூலிகை செடிகள், பழங்கள் அதிகளவில் காணப்படுகின்றன. அதில், மருத்துவ குணம் கொண்ட, நாவல் பழ சீசன் தற்போது துவங்கி உள்ளது. உள்ளூர் மக்கள் இதனை விரும்பி உண்டு வருகின்றனர்.

கடைகளில் விற்பனை செய்யப்படும், இந்த பழங்களை சுற்றுலா பயணிகளும் ஆர்வத்துடன் வாங்கி செல்கின்றனர். சித்தா மருத்துவர்கள் கூறுகையில் 'இரும்பு சத்து நிறைந்துள்ள நாவல் பழத்தை உண்பதன் மூலம், ரத்த ஓட்டம் சீராகும். இதன் பட்டையை காய வைத்து, பொடியாக்கி பயன்படுத்தினால் வயிற்றில் ஏற்படும்

நோய் கிருமிகள் அழியும்; ரத்தசோகை நோயும் மாறும். இதனை மனிதர்கள் விரும்பி உண்டாலும், வன உயிரினங்களுக்காகவும் அதனை வனப்பகுதியில் விட வேண்டும். முழுமையாக அவற்றை பறிக்க கூடாது ' என்றனர்.

**திண்டுக்கல்லில் முருங்கைக்காய் விலை சரிவு**

திண்டுக்கல்: திண்டுக்கல்லில் வரத்து அதிகரிப்பால் முருங்கைக்காய் கிலோ ரூ.18 க்கு விலை சரிவடைந்துள்ளது.

திண்டுக்கல் மாவட்டத்தில் 2,060 எக்டேரில் முருங்கைக்காய் சாகுபடி செய்யப்படுகிறது. இங்கிருந்து மதுரை, கோவை, சேலத்திற்கு விற்பனைக்கு அனுப்பப்படுகிறது. திண்டுக்கல் மார்க்கெட்டிற்கு தினமும் 300 கிலோ முருங்கைக்காய் விற்பனைக்கு வரும்.

சென்ற மாதம் முருங்கையில் பூச்சி மற்றும் நோய் தாக்குதல் ஏற்பட்டு சாகுபடி குறைந்தது. இதனால் விலையும் அதிகரித்து இருந்த நிலையில் ஒரு கிலோ முருங்கைக்காய் ரூ.120 வரை விற்றது. தற்போது, வரத்து அதிகரித்துள்ளதால் நேற்று முன்தினமும், நேற்றும் ஒரு கிலோ ரூ.18க்கு விற்றது.

**நவீன திராட்சை ரகங்களை 'குளோனிங்' செய்து விவசாயிகளுக்கு வழங்க முடிவு**

கம்பம்: தமிழகத்தில் திராட்சை சாகுபடி பரப்பு சிறிது சிறிதாக குறைந்து வருகிறது. பழைய ரகங்கள், மகசூல் குறைவு போன்றவற்றால் விவசாயிகள் பாதிக்கின்றனர்.

எனவே விவசாயிகளுக்கு ஏற்றுமதி ரகம் மற்றும் ஒயின் ரகங்களை சாகுபடி செய்ய ஆராய்ச்சி நிலையம் ஊக்குவித்து வருகிறது. ஆனால் அதற்கான வாய்ப்புக்கள் குறைவாக இருக்கிறது.

வர்த்தக ரீதியில் நல்ல விளைச்சல் தரக்கூடிய மாணிக் சாமன், ரெட்குளோப், சரத்சீட்லெஸ், கிருஷ்ணாசீட்லெஸ், மெடிக்கா, ஏ 18-3 போன்ற ரகங்களை சாகுபடி செய்ய விரும்பினாலும், அதற்கான குச்சிகள் கிடைப்பதில் பிரச்னைகள் உள்ளது. எனவே இந்த ரக குச்சிகளை தாய் குணம் மாறாமல் மரபு வழி பெருக்கம் மற்றும் உற்பத்தி செய்ய ஆனைமலையன்பட்டி திராட்சை ஆராய்ச்சி நிலையத்தில் 2 ஏக்கர் பரப்பில்'மதர் நர்சரி' அமைக்கப்பட்டது.

ஆராய்ச்சிநிலைய தலைவர் பார்த்திபன், உதவி பேராசிரியர் சுப்பையா கூறுகையில், “உயர் விளைச்சல் தரக்கூடிய 125 ரகங்களை புனே மற்றும் ஐதராபாத்தில் உள்ள தேசிய திராட்சை ஆராய்ச்சிநிலையங்களில் இருந்து வாங்கி, நமது ஆராய்ச்சி நிலையத்தில் கிராப்ட் (குளோனிங்) செய்துள்ளோம். தாய் குணம் மாறாமலும், மரபு வழியிலும் இந்த ரகங்கள் இருக்கும்.

இதற்கென பணிகள் தற்போது முழுவீச்சில் நடந்து வருகிறது. அடுத்த ஆண்டு அந்த ரகங்களின் குச்சிகள் விவசாயிகளுக்கு வழங்கப்படும்,” என்றனர்.---

## தீவன தட்டுப்பாட்டால் குறைந்தது கால்நடை வளர்க்கும் ஆர்வம்

போடி: போடி பகுதியில் கால்நடை தீவன தட்டுப்பாட்டால் சிறு விவசாயிகளிடம் கால்நடை வளர்க்கும் ஆர்வம் குறைந்து வருகிறது.

மாவட்டத்தில் சிறு விவசாயிகள், விவசாய கூலிகள், விவசாயத்துடன் சார்பு தொழிலான கால்நடை வளர்ப்பிலும் ஆர்வம் காட்டி வந்தனர். குறிப்பாக பால்மாடுகளை வளர்ப்பதால் பால் உற்பத்தி, மாட்டு கழிவுகளினால் விவசாயத்திற்கு பயன்படும் உரம் மற்றும் கன்றுகளை வளர்ப்பதால் லாபம் போதுமான அளவிற்கு லாபம் கிடைத்து வந்தது.

பால்மாடுகளை தோட்டம், வரப்பு மற்றும் வாய்க்கால்

பகுதிகளிலும் கிடைக்கும் பச்சை தீவனங்கள், சோளம், மக்காச்சோளம் போன்ற பயிர்களின் அறுவடைக்குப் பின் கிடைக்கும் அதன் தட்டைகள், கழிவுகளை வைத்து கால்நடைகளுக்கு தீவனமாக பயன்படுத்தி வந்தனர்.

ஆனால் சமீப காலமாக பருவமழை பொய்த்து வருவதால், நிலத்தடி நீர்மட்டம் குறைந்ததோடு, விவசாய நிலங்கள் முழுவதும் தரிசாகவும், பிளாட்டுகளாகவும் மாறி வருகின்றன. இதனால் பச்சை தீவனங்களுக்கு பெரிதும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளன.

மானாவாரியாக பயிரிடப்படும் நிலக்கடலை சரியான விளைச்சல் இல்லாமல் மகசூல் பாதிப்படைந்துள்ளது. நிலக்கடலை பயிரிடாமல் தக்காளி, துவரை பயிரிடப்பட்டு வருகின்றனர். மாட்டுத்தீவனமாக பயன்படும் கடலை, சோளம் பயிர்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. குறைந்த எண்ணிக்கையில் கால்நடைகளை வளர்த்து வரும் சிறு விவசாயிகள் மாட்டுத்தீவனத்திற்காக குறைந்தது 3 கி.மீ.,துாரம் உள்ள மலை அடிவாரப்பகுதிகளுக்கு சென்று பச்சை தீவனங்களை டூவீலரில் கொண்டு வரும் நிலையில் சிரமம் அடைந்து வருகின்றனர். இதனால் கால்நடை வளர்ப்பதில் அதிக ஆர்வம் காட்ட முடியாத நிலையில் விவசாயிகளிடம் ஆர்வம் குறைந்து

வருகிறது.

**இன்றைய வேளாண் செய்திகள்**

## மகாராஷ்ராவில் அணைகட்ட 10 ஏக்கர் நிலத்தை விற்று அந்த பணத்தை ஊருக்கு வழங்கிய விவசாயி



மும்பை: மகாராஷ்ராவில் அணைகட்டுவதற்காக விவசாயி ஒருவர் 10 ஏக்கர் நிலத்தை ஊருக்கு தானமாக வழங்கியுள்ளார். நாட்டின் பல்வேறு பகுதிகளில் நிலவும் வறட்சிக்கு மகாராஷ்டிரா மாநிலமும் தப்பவில்லை. அம்மாநிலத்தின் அகோலா பகுதியில் முன் எப்போதும் இல்லாத அளவிற்கு தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டிருப்பதால் விவசாயிகளும், பொதுமக்களும் தவித்து வருகின்றனர்.

இந்த நிலையில் அகோலா பகுதியை சேர்ந்த விவசாயி ஒருவர் நீர் தேக்கம் கட்டுவதற்காக தனது 10 ஏக்கர் நிலத்தை விற்று அந்த பணத்தை ஊருக்கு தானமாக வழங்கியுள்ளார். இதன் மூலம் மழை காலத்தில் தமது கிராமத்திற்கு தேவையான நீரை சேமிக்க முடியும் என்று அந்த விவசாயி தெரிவித்துள்ளார்.

கொய்மலர்களால் அலங்கார வளைவுகள்:

**ஊட்டி மலர் கண்காட்சியில் ஒரு லட்சம் வண்ண மலர்களால் 'சென்னை சென்ட்ரல் ரயில் நிலையம்'**



ஊட்டி: மலர் கண்காட்சியில் ஒரு லட்சம் மலர்களை கொண்ட சென்னை சென்டரல் ரயில் நிலையக்கின் முகப்பு தோற்றம், கொய்மலர்களை கொண்டு சிட்டுக்குருவி மற்றும் நுழைவு வாயில்களில் கொய்மலர்களால் ஆன அலங்கார வளைவுகள் அமைக்கப்பட்டது. ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் 27ம் தேதி துவங்கி 29ம் தேதி வரை மூன்று நாட்கள் 120வது மலர் காட்சி நடக்கிறது. மலர் காட்சியை முன்னிட்டு தாவரவியல் பூங்காவில் பல்வேறு வகைகளை கொண்ட 4 லட்சம் மலர் செடிகள் நடவு செய்யப்பட்டுள்ளது. இன்கா மேரி கோல்டு, பிரஞ்ச் மேரி கோல்டு, பிளாக்ஸ், பெட்டூனியா, பேன்சி, டயான்தஸ், பெகோனியா, டேலியா, பால்சம், ரெனன்குலஸ், வயோலா, அஜிரேட்டம், கேலண்டுலா, கிளாடியோலஸ், லலில்லியம், சன்பிளவர், சப்னேரியா போன்றவை பூங்காவில் பல்வேறு பகுதிகளில் மலர் பாத்திகளில் நடவு செய்யப்பட்டு பொலிவுடன் பார்வையாளர்களை கவர்ந்த வருகிறது.

15 ஆயிரம் தொட்டிகள் மலர் கண்காட்சி மாடத்தில் பார்வையாளர்களை கவரும் வகையில் அலங்கரித்து வைக்கப்படவுள்ளது. மேலும், 6 ஆயிரம் தொட்டிகள் புது பூங்காவில் அலங்காரங்கள் செய்யப்படவுள்ளது. இம்முறை 120வது மலர் காட்சியை முன்னிட்டு பல வண்ணங்களில் ஒரு லட்சத்து 30 ஆயிரம் கார்னேசன் மலர்களை கொண்டு 68 அடி நீளம் 30

அடி உயரம், 10 அடி அகலம் கொண்ட சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தின் முகப்பு தோற்றும் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், கார்னேசன் மலர்களை கொண்டு 10 அடி நீளம், 4 அடி அகலம், 6 அடி உயரம் கொண்ட சிட்டுக் குருவியின் உருவம் அமைக்கப்படவுள்ளது. பல ஆயிரம் கொய் மலர்களை கொண்டு 5 நுழைவு வாயிலும், ஆர்கிட் மலர்களை கொண்டு 5 அலங்கார வளைவுகள் உட்பட பல்வேறு மலர் அலங்காரங்கள் செய்யப்படுகின்றன.

இது தவிர மலர்களை கொண்டு பல்வேறு ரங்கோலி அமைக்கப்படுகிறது. மேலும், தோட்டக்கலைத்துறையினர் வளத்தை சித்தரிக்கும் வகையில் கோட்டக்கலை அரங்கு அமைக்கப்பட்டு மலர்கள், காய்கறிகள், பழங்கள் மற்றும் வாசனை திரவியங்களின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டும் வகையில் பல்வேறு மாவட்டங்களில் இருந்து முக்கிய கண்காட்சி பொருட்கள் கொண்டு வரப்பட்டு காட்சியில் வைக்கப்பட்டுள்ளன. நெதர்லாந்து நாட்டில் இருந்து கொண்டு வரப்பட்ட டூலிப் மலர் அலங்காரமும் செய்யப்படுகிறது. மேலும், மூன்று நாட்கள் கலை நிகழ்ச்சிகள் நடக்கிறது. அரசுத்துறை அரங்குகள் போட்டியாளர் அரங்கும் அமைக்கப்படும். இந்த ஆண்டின் நீலகிரி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் பூங்காக்களை அமைத்து போட்டிக்காக பதிவு செய்துள்ளனர். இந்த ஆண்டு சிறந்த பூங்காவிற்கான சுழற்கோப்பை வழங்கப்படவுள்ளது.

**முல்லை பெரியாறு அணையின் நீர்மட்டம் 152 அடியாக உயர்த்தப்படுமா? மத்திய குழு நாளை ஆய்வு**



தேனி: முல்லை பெரியாறு அணையில் நாளை மத்திய குழு ஆய்வு மேற்கொள்ள உள்ள நிலையில் கேரளாவில் இடதுசாரி முன்னணி தலைமையிலான புதிய அரசு பதவியேற்று இருப்பதால் பெரும் எதிர்பார்ப்பு நிலவுகிறது. அணையின் நீர் மட்டத்தை 152 அடியாக உயர்க்த நடவடிக்கை எடுக்கப்படுமா? சட்டமன்ற தேர்தலில் வாக்குறுதி கொடுத்த படி முல்லை பெரியாறில் புதிய அணைகட்ட கேரள அரசு நடவடிக்கை எடுக்குமா? என்ற எதிர்பார்ப்புபக்கு இடையே மத்திய குழு நாளை அணையை ஆய்வு செய்ய உள்ளது.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 28 மற்றும் 29-ம் தேதிகளில் முல்லை பெரியாறு அணையில் ஆய்வு நடத்திய மத்திய குழுவினர் 5 மாதங்களுக்கு பிறகு மீண்டும் நாளை ஆய்வு செய்கிறது. இதனை தொடர்ந்து குமுளியில் மத்திய குழுவின் ஆலோசனை கூட்டம் நடைபெற உள்ளது. தமிழகத்தில் மீண்டும் ஆட்சிக்கு வந்துள்ள அதிமுக தேர்தல் அறிக்கையில் முல்லை பெரியாறு அணையின் நீர் மட்டத்தை 152 அடியாக உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவித்துள்ளது.

இதனால் முல்லை பெரியாறு அணை விவகாரத்தில் தமிழகம், கேரளா ஆகிய இரு மாநில அரசுகளின் அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து பெரும்

எதிர்பார்ப்பு நிலவுகிறது. இதனால் நாளை முல்லை பெரியாறு அணையில் நடைபெற உள்ள மத்திய குழுவின் ஆய்வு மற்றும் ஆலோசனை கூட்டம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

## விவசாயியின் மகள் பிரேமசுதா மாநிலத்தில் முதலிடம்

ராசிபுரம்: மாநிலத்தில் முதலிடம் பிடித்த ராசிபுரம் மாணவி பிரேமசுதா, டாக்டராகி ஏழை மக்களுக்கு சேவை செய்ய விருப்பம் என தெரிவித்துள்ளார்.

பத்தாம் வகுப்பு தேர்வில் நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் எஸ்.ஆர்.வி எக்ஸல் மெட்ரிக் பள்ளி மாணவி பிரேமசுதா 499 மதிப்பெண்கள் ெபற்று, மாநில அளவில் முதலிடம் பிடித்தார். இவரது சொந்த ஊர் திண்டுக்கல் மாவட்டம் ரெட்டியார்சத்திரம் ஆகும். பள்ளி விடுதியில் தங்கி படித்து வருகிறார். இவரது தந்தை ராஜேந்திரன். தாய் ரேணுகா தேவி. இருவரும் விவசாயிகள். மாணவி பிரேமசுதாவுக்கு ரேவதி என்ற சகோதரி உள்ளார். பிளஸ் 2 முடித்துள்ள அவரும், 1076 மதிப்பெண்கள் பெற்று, வேளாண்மை படிக்க முயற்சி செய்து வருகிறார்.

மாணவி பிரேமசுதா கூறுகையில், ''மாநிலத்தில் முதலிடம் பிடிப்பேன் என நினைக்கவில்லை. 495 மதிப்பெண்கள்தான் வரும் என நினைத்திருந்தேன். ஆனால் மாநிலத்தில் முதலிடம் பிடித்திருப்பது மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது. இதற்கு பள்ளி நிர்வாகத்தினர், ஆசிரிய, ஆசிரியைகள், தலைமை ஆசிரியர், பெற்றோர் ஆகியோர் கொடுத்த ஊக்கம்தான் காரணம். இதுதவிர எனது சித்தப்பா சீனிவாசனும் என்னை அதிகம் ஊக்கப்படுத்தினார். அவருக்கு நன்றி. எனது சித்தி டாக்டராக உள்ளார். அவர் கோவையில் மருத்துவமனை வைத்துள்ளார். நானும், டாக்டராகி, ஏழை மக்களுக்கு சேவையாற்ற விரும்புகிறேன்,'' என்றார்.

## கரும்பு சோகைகளை மக்கச்செய்யும் நுண்ணுயிர் கூட்டுக்கலவை அறிமுகம்

தியாகதுருகம், : விழுப்புரம் மாவட்டம் தியாகதுருகம் ஒன்றியத்தில் கரும்பு விவசாயிகள் பலன் அடையும் வகையில் கரும்பு சோகைகளை மக்கச்செய்யும் புதிய நுண்ணுயிர் கூட்டுக்கலவை அறிமுகம் செய்து அதற்கான செயல்விளக்க பயிற்சி தியாகதுருகம் அருகே வடதொரசலூரில் விவசாயிகளின் வயலுக்கு சென்று அதிகாரிகள் செய்து காட்டினர்.

தலைமை வேளாண்மை இணை இயக்குனர் ரவி தலைமை தாங்கினார். வேளாண்மை துணை இயக்குனர் கனகசபை, நீர்வள மேம்பாட்டு உதவி இயக்குனர் கோவிந்தன், வேளாண்மை அதிகாரி சுப்ரமணியன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தியாகதுருகம் வேளாண்மை உதவி இயக்குனர் ராமச்சந்திரன் வரவேற்றார். தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக விஞ்ஞானி சுப்ரமணியன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு பேசுகையில், விவசாய நிலங்களில் உள்ள கழிவுகளை (இலைகள், கரும்பு சோகை, தழை) அந்த மண்ணிலேயே குறுகிய காலத்தில் மட்கவைத்து உரமாக்குவதற்கு இந்த நுண்ணுயிர் கூட்டுக்கலவை பயன்படுகிறது. ஒரு ஏக்கர் கரும்பு வயலுக்கு 10 கிலோ போதும். இக்கலவையை 20 கிலோவிற்கு 40 லிட்டர் நீர் கலந்து தெளித்தால் போதும், நிலம் ஈரப்பதத்துடன் இருப்பது முக்கியம். 60 நாட்களில் முழுவதுமாக கரும்பு தோகைகள் மக்கிவிடும். இது மண்ணுக்கு சிறந்த சத்தாகும். மண் பரிசோதனை செய்து அதற்கேற்றவாறு பயிரிடவேண்டும்.

பயிர்களை தாக்கும் நோய்களை விவசாய அதிகாரிகளிடம் காட்டி அவர்கள் கூறும் ஆலோசனைப்படி மருந்துகளை தெளிக்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினர்.

வேளாண்மை அலுவலர்கள் நித்யா, பொன்னுராசன், தனியார் சர்க்கரை ஆலை அலுவலர் திருமூர்த்தி, உதவி வேளாண்மை அலுவலர்கள் பழனிசாமி, சேகர், கோபால், வெங்கடேசன் மற்றும் விவசாயிகள் கலந்து

கொண்டனர். உதவி வேளாண்மை அலுவலர் ஞானவேல் நன்றி கூறினார்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**'இந்தியாவில் பயிர் செய்வோம்' என்பதை ஊக்கப்படுத்துங்கள் பிரதமர் மோடிக்கு விவசாயிகள் புதுவிதமாக கோரிக்கை**




புதுடெல்லி,

'இந்தியாவில் பயிர் செய்வோம்' என்பதை ஊக்கப்படுத்துங்கள் என்று பிரதமர் மோடிக்கு விவசாயிகள் அனைவரது கவனத்தையும் ஈர்க்கும் விதமாக கோரிக்கை விடுத்து உள்ளனர்.

"மேக் இன் இந்தியா" என்ற திட்டத்தின் வரிசையில் 'இந்தியாவில் பயிர் செய்வோம்' திட்டத்தையும் ஊக்கப்படுத்துங்கள் என்று வயல்வெளியில் பயிர்கள் மூலம் மோடியின் உருவத்தை வடிவமைத்து கோரிக்கையை முன்வைத்து உள்ளனர். பிரதமர் மோடி இளைஞர்களை விவசாயத்தில் ஈடுபட செய்வதற்காக வேண்டுகோள் விடுக்கவேண்டும் என வலியுறுத்தி பரத்சிங்கா என்ற கிராமத்தில் ஓவியத்தை விவசாயிகள் வடிவமைத்துள்ளனர். பிரதமர் மோடியின் உருவப்படம் கொண்ட இந்த ஓவியம் 7,200 சதுர அடியில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

விவசாயி ஸ்வேதா பட்டாத் பேசுகையில் "பேனா முனைக்கு இருக்கும் வலிமை கலைக்கும் உள்ளது. பிரதமர் மோடி மேக்-இன்-இந்தியா திட்டத்தை வலியுறுத்திப் பேசி வருகிறார். அவர், இந்தியாவில் பயிர் செய்வோம் திட்ட பிரச்சாரத்தையும் முன்னெடுக்க வேண்டும் என்று நாங்கள் வலியுறுத்துகிறோம். இப்போதைய நாட்களில் விவசாயிகள் ஏராளமான பிரச்சினைகளை சந்திக்கின்றனர் மற்றும் இளைஞர்கள் விவசாயிகளாக விரும்புவதில்லை. எனவே, அவர்களை ஊக்குவிக்க வேண்டிய அவசியம் உள்ளது" என்றுகூறிஉள்ளார்.

விவசாயிகளும், ஓவியர்களும் ஒன்றாக சேர்ந்து சுமார் மூன்று மாதங்களாக உழைத்து இந்த உருவப்படத்தை உருவாக்கியுள்ளனர். ஓவியத்தில், 'டியர் பிரதமர், தயவு செய்து இந்தியாவில் விளை விப்போம்' என்ற வாக்கியத்தையும் அவர்கள் அமைத்துள்ளனர். பிரதமர் மோடிக்கு கடிதம் எழுதிஉள்ள விவசாயிகள், உள்நாட்டு பாரம்பரிய விதைகள் கிடைக்காதது மற்றும் பூச்சிக் கொல்லி தட்டுப்பாடு மற்றும் இயற்கை விவசாயத்தின் தேவை குறித்தான விளக்கங்களை வெளிப்படுத்தி உள்ளனர்.

"கடந்த 30 ஆண்டுகளாக இயற்கை விவசாயம் செய்து வருகிறேன். உள்நாட்டு பாரம்பரிய விதைகள் கிடைப்பது கடினமாக உள்ளது. இதுதொடர்பாக பிரதமர் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று விவசாயி வசந்த் கூறிஉள்ளார். பிரதமர் மோடியின் ஓவியம் பயிரால் 7,200 சதுர அடியில் வடிவமைக்கப்பட்டு உள்ளது பலரை ஈர்த்து வருகிறது.

அதிகபேர் சென்று பார்த்து வருகின்றனர். பிரதமர் மோடியும் இதனை கவனிப்பார், விவசாயத்தை லாபகரமாக மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை எடுப்பார் என்று விவசாயிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

**கடவுளின் பிரசாதம் – தண்ணீர்**




பிரதமராக நரேந்திரமோடி பதவியேற்றதிலிருந்து, மக்களோடு அனைத்து அமைச்சர்களும், அதிகாரிகளும் நேரடி தொடர்பு கொள்ள வேண்டும், மக்களோடு நேரில் பேசவேண்டும், அவர்களின் குறைகளை கேட்க வேண்டும் என்பதுதான் அவரது முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு மாதமும் இதற்காக அவர், ரேடியோவில் ஒருநாள் ''மனதின் குரல்'' என்ற தலைப்பில் 30 நிமிடம் உரையாற்றுகிறார். இது மக்களுக்காக ஆற்றும் உரை. ஒவ்வொரு முறையும் ஏதாவது ஒரு செய்தியை மக்களிடம் எடுத்துச் செல்கிறார். அந்த வகையில், இந்த மாதம் கடந்த ஞாயிற்றுக்கிழமை பொதுமக்களிடம் ரேடியோவில் உரையாற்றினார். அப்போது சில நல்ல செய்திகளை எடுத்துச் சொன்னார். வனங்களை பாதுகாப்பதையும், ஒவ்வொரு சொட்டு தண்ணீரையும் சேமித்து வைப்பதையும் மக்கள் இயக்கமாகக் கொண்டு செயல்பட வேண்டும் என்பதுதான், இந்தமாதம் அவர் தெரிவித்த செய்தியின் முக்கிய அம்சமாகும். ''நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் கடுமையான கோடைவெயில் சுட்டெரிக்கிறது. அது மனிதர்களாகட்டும், பறவைகளாகட்டும்,

விலங்குகளாகட்டும், இந்த கடுமையான கோடைவெயிலில் பெரிதும் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறது.

சுற்றுச்சூழல் பராமரிப்பு போதிய அளவில் இல்லாததன் காரணமாகத்தான் தொடர்ந்து இந்த பிரச்சினைகள் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. வனங்கள் பெருமளவில் அழிக்கப்பட்டு வருகின்றன. தொடர்ந்து மரங்கள் வெட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஒருவகையில் மனிதகுலம் சுற்றுச்சூழலை அழிக்கிறது. அதன் காரணமாக தன்னையும் அழிவின் பாதையில் கொண்டு போகிறது. வனங்களையும், தண்ணீரையும் பாதுகாப்பது ஒவ்வொருவரின் கடமையும் ஆகும். பருவமழை பெய்யப்போகிறது. ஜூலை, ஆகஸ்டு, செப்டம்பர் மாதங்களில் பெய்யும் பருவமழையில் கிடைக்கும் தண்ணீரை ஒரு சொட்டு கூட வீணாக்க மாட்டோம் என்று ஒவ்வொருவரும் முடிவெடுக்க வேண்டும். மழை வரும் முன்பு அதை எவ்வாறு சேமிக்க வேண்டும் என்று ஒவ்வொருவரும் செயல்பட வேண்டும். ஒவ்வொரு சொட்டு தண்ணீரையும் சேமிக்க வேண்டியது மிகவும் அவசியமாகும். ஏனெனில், தண்ணீர் என்பது கடவுளின் பிரசாதம். ஒவ்வொரு சொட்டு தண்ணீரையும் சேமிக்க ''தண்ணீரை சேமிப்போம்'' என்ற மக்கள் இயக்கம் தொடங்கப்படவேண்டும்'' என்று அந்த உரையில் கூறினார். பிரதமர் கூறியபடி, தண்ணீர் என்பது கடவுளின் பிரசாதம்தான். ஏனெனில், உலகில் மனிதன் எதையும் உருவாக்கி விடலாம். ஆனால், தண்ணீரையும், உயிரையும் அவனால் நிச்சயமாக உருவாக்க முடியாது. அது இயற்கை தந்த அருட்கொடை. ஆகவே, விலை மதிப்பற்ற இருபொருளையும் காப்பாற்றுவது மனிதனின் கடமை. நிச்சயமாக தண்ணீரை சேமிப்பதும், பாதுகாப்பதும் ஒவ்வொரு குடிமகனின் கடமையும் ஆகும். அதற்கும் மேலாக மத்திய–மாநில அரசுகளுக்குத்தான் பெரிய கடமை இருக்கிறது.

மழை எவ்வளவு பெய்தாலும், தண்ணீர் வெள்ளமென பெருக்கெடுத்து ஓடினாலும், தமிழ்நாட்டின் பல இடங்களில் இந்த தண்ணீர் முறையாக சேமித்து வைக்க இடமில்லாமல், கடலில் போய் வீணாக கலக்கிறது. இவ்வாறு கடலில் போய் கலக்கும் தண்ணீரைசேமித்து வைத்தால், தமிழ்நாட்டில் தண்ணீர் பஞ்சம் என்பதற்கு ஒரு போதும் இடமிருக்காது.

எனவே, கடலில் கலக்கும் தண்ணீரை சேமித்து வைக்க ஆங்காங்கு புதிய ஏரி, குளங்களை உருவாக்க வேண்டும். இப்போது இருக்கும் அணைகள், ஏரிகள், குளங்கள் எல்லாம் மண்மேடிட்டுக்கொண்டு வருகிறது. இவைகளையெல்லாம் முறையாக தூர்வாரினால் நிச்சயமாக தண்ணீர் கொள்ளளவு அதிகரிக்கும். பொதுவாக அணைக்கட்டுகளில் தூர்வாரப்படும் மணலுக்கு பயிர்சாகுபடி செய்யும் வேளாண் நிலங்களில் கடும் தேவை இருப்பதால், விவசாயிகளே எடுத்துக் கொள்வார்கள். எல்லாவற்றுக்கும் மேலாக தங்க நாற்கர சாலை திட்டம் உருவாக பிதாமகனாக இருந்த வாஜ்பாய், இந்தியாவில் உள்ள நதிகளையெல்லாம் இணைக்க வேண்டும் என்பதை லட்சியமாக கொண்டிருந்தார். அதை நிறைவேற்றும் வகையில், அவர் வழியில் வந்த பா.ஜ.க. அரசு, கங்கையையும், தாமிரபரணியையும் இணைக்க மாபெரும் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு முயற்சி எடுத்தால், இந்தியாவில் உள்ள எல்லா நதிகளிலும் உள்ள தண்ணீர் வீணாகாமல், பிரதமர் குறிப்பிட்ட 'கடவுளின் பிரசாதம்' எல்லா மக்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட உதவியாக இருக்கும். மழைநீரை சேமித்து வைப்பதற்கான திட்டங்களுக்கு முன்னுரிமை கொடுத்து, மத்திய அரசாங்கம், தமிழக அரசுக்கு அதிக நிதி ஒதுக்கி பணிகளையும் தொடங்க வேண்டும்.

## தோவாளை மார்க்கெட்டில் மல்லிகை பூ விலை ரூ.300 உயர்வு ஒரு கிலோ ரூ.450-க்கு விற்பனை



தோவாளை பூ மார்க்கெட்டில் நேற்று மல்லிகை பூ விலை கிலோ ரூ.300 உயர்ந்தது. இதனால் ஒரு கிலோ ரூ.450-க்கு விற்பனை செய்யப்பட்டது.

பூ மார்க்கெட்

நாகர்கோவில் அருகே உள்ள தோவாளையில் பூ மார்க்கெட் உள்ளது. இங்கு தினமும் குமரி மாவட்டத்தில் மட்டுமின்றி நெல்லை, மதுரை உள்பட பல இடங்களில் இருந்தும் பூக்களை விற்பனை செய்வதற்காக விவசாயிகள் கொண்டுவருகிறார்கள்.

தினமும் அதிகாலையிலேயே மார்க்கெட்டிற்கு பூக்கள் வரத்தொடங்கிவிடும். இதனால் வியாபாரிகளும் அப்போதே வந்து, பூக்களை ஏலம் எடுக்க தொடங்கிவிடுவார்கள்.

மல்லிகை விலை உயர்வு

இந்நிலையில் நேற்று முன்தினம் ஒரு கிலோ ரூ.150-க்கும் விற்பனை செய்யப்பட்ட மல்லிகை பூ நேற்று விலை ரூ.300 உயர்ந்தது. இதனால் ஒரு கிலோ ரூ.450-க்கு விற்பனை செய்யப்பட்டது.

மல்லிகை பூவின் விலை உயர்வு குறித்து பூ வியாபாரி விஸ்வநாதன் கூறுகையில் “ நாளை (இன்று) வியாழக்கிழமை முகூர்த்த தினம் என்பதால் மல்லிகை பூவின் தேவை அதிகமாக இருந்தது. இதனால் மார்க்கெட்டிற்கு வந்த மல்லிகை பூக்களை வியாபாரிகள் போட்டி போட்டு ஏலம் எடுத்து சென்றனர். இதனால் தான் விலை உயர்ந்தது“ என்றார்.

மற்ற பூக்கள்விலை

மற்ற பூக்களின் விலை விவரம் ஒரு கிலோவிற்கு வருமாறு:-

பிச்சி ரூ.850-க்கும், முல்லை ரூ.700-க்கும், கனகாம்பரம் ரூ.400-க்கும், சம்பங்கி ரூ.250-க்கும், ஸ்டெம்புரோஸ் ரூ.200-க்கும், சிவந்தி ரூ.150-க்கும், பட்டன்ரோஸ் ரூ.140-க்கும், அரளி ரூ.120-க்கும், வெள்ளை சிவந்தி ரூ.120-க்கும், மருக்கொழுந்து ரூ.80-க்கும், கேந்தி ரூ.60-க்கும், மஞ்சள்

கேந்தி ரூ.60-க்கும், கொழுந்து ரூ.60-க்கும், வாடாமல்லி ரூ.40-க்கும், மாம்பழ கேந்தி ரூ.30-க்கும், கோழிப்பூ ரூ.30-க்கும், துளசி ரூ.20-க்கும், பச்சை ரூ.8-க்கும், தாமரை (100 எண்ணம்) ரூ.200-க்கும், ரோஜா (100 எண்ணம்) ரூ.40-க்கும் விற்பனை செய்யப்பட்டது.